‘செயிண்ட். மோனிகா’ஸ் கத்தோலிக ஆரம்ப பள்ளி நமது குழந்தைகள் மற்றும் இளம் பிராயத்தினர் பாதுகாப்பாக இருப்பதையும் மேலும் பாதுகாப்பாக உணர்வதையும் உறுதி செய்ய அர்ப்பணித்துள்ளது’.
(சிறுவர் பாதுகாப்பு மற்றும் பேணிகாத்தல் கொள்கை 2016)

## சிறுவர் பாதுகாப்பு மற்றும் பேணிகாத்தல் நடைமுறை:

**நிலை ஒன்று :** ஊழியர்களில் அக்குழந்தையை கையாள்பவர், அக்குழந்தை கூறுகின்ற பிரச்சனைகளுக்கு கவனமாக காது கொடுத்து கேட்பதுடன் அந்த குழந்தைக்கு ஏதேனும் காயம் ஏற்பட்டுள்ளதா எனவும் கவனத்துடன் பரிசோதித்து பார்ப்பார்.

**நிலை இரண்டு :** பேணிகாக்கும் தலைமை ஆசிரியருக்கு வாய்மொழியாக தகவல் தெரிவிக்கப்படுவதுடன் குறைகளை தெரிவிக்கும் இளஞ்சிவப்பு படிவம் / **safeguarding.co.uk** நுழைவுப்படிவம் பூர்த்தி செய்யப்படும்.

**நிலை மூன்று :** அவ்விவகாரம் **பண்முகவாண்மை பேணிகாக்கும் மையத்துடன் (Multi Agency Safe Guarding Hub)** கலந்தாலோசிக்கப்படும் மேலும் தேவைகளின் தீவிரத்தை அடையாளங்கண்டு அதன் அடிப்படையில் மேற்கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை மையம் முடிவு செய்யும்.

**விருப்ப தேர்வு 1 :** சிறுவருடன் மேற்கொண்டு ஒரு கலந்தாலோசனை மேற்கொள்ளப்படலாம். மேற்கொண்டு எந்த ஒரு நடவடிக்கையும் தேவை இல்லை என முடிவு செய்யப்பட்டால், அந்த படிவம் கோப்பிடப்பட்டு பள்ளியில் உள்ள ஆவணங்களுடன் பாதுகாப்பாக வைக்கப்படும். மேற்கொண்டு நடவடிக்கை தேவை எனில், விருப்பத்தேர்வு 2 (அ) 3 மேற்கொள்ளப்படும்.

**விருப்ப தேர்வு 2:** பேணிகாக்கும் ஆசிரியர் ஒருவர் பெற்றோரை தொடர்பு கொண்டு இவ்விவகாரம் குறித்து விவாதிக்க அழைப்பு விடுப்பார். மேற்கொண்டு எவ்வித நடவடிக்கையும் தேவை அல்ல என முடிவு எடுக்கப்பட்டால் சம்பாஷனையின் பொழுது எடுக்கப்பட்ட குறிப்புகள் பாதுகாப்பாக பள்ளி ஆவணங்களோடு வைக்கப்படும் மேற்கொண்டு நடவடிக்கை தேவை எனில், விருப்பத்தேர்வு 3 மேற்கொள்ளப்படும்.

**விருப்ப தேர்வு 3:** பேணிகாக்கும் தலைமை ஆசிரியர் சிறுவர் மற்றும் குடும்ப உதவி சேவை அமைப்பை ஆலோசனை வேண்டி தொடர்பு கொள்வார். தெரிவிக்கப்பட்ட கவலைகள் மற்றும் சம்பவங்கள் **இரகசியமானதாக** வைக்கப்படுவதுடன் தனிப்பட்ட வழக்குகளாக செயல்படுத்தப்படும். ஆவணப்படுத்தப்பட்டவை அனைத்தும் பாதுகாப்பாக கோப்பிடப்பட்டு சிறுவர் பள்ளி ஆவண காப்பகத்தில் பாதுகாப்பாக வைக்கப்படும்.

**செயிண்ட். மோனிகா’ஸ் ஆரம்ப பள்ளியின் பேணிகாக்கும் குழு உறுப்பினர்கள்:**

**நியமிக்கப்பட்ட தலைமை :** மிஸ் நடாலி ஷனஹன்

**துணை தலைமை :** மிஸ்டர் ராபர்ட் ஓ’மல்லே

**பேணிக்காக்கும் குழு உறுப்பினர் :** திருமதி. அலிசன் காக்கரில்

**பேணிகாக்கும் குழு உறுப்பினர் :** திருமதி. அந்தியா கோஸ்டிக்

**பேணிகாக்கும் குழு ஆளுநர்:** ஃபாதர் ஜேம்ஸ் கேஸடி